உ.

ஸ்ரீ குருபயம்
ஸ்ரீ சுவாமிநாதசுவாமி துணை

# சுவாமிமலை
# திருவலஞ்சுழி
# தல வரலாறு

பதிப்பாளர்;
எஸ். சோமசுந்தரம், பி. ஏ. பி. எல்.
நிர்வாக அதிகாரி

ஸ்ரீ சுவாமிநாதசுவாமி
தேவஸ்தான வெளியீடு

1967

பதிப்புரிமைபெற்றது ★ விலை ரூ. 1-00

உ

திருச்சிற்றம்பலம்,

கண்கொடுத்த பிள்ளையார் துணை.

# முகவுரை

தென்னாடுடைய சிவனே போற்றி!

எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி!!

பழைமைக்கும் பெருமைக்கும் தங்குமிடமான இந்த அகண்ட பாரத தேசத்தில் கண்ணிற்கினிய கற்கோவில்களும், சிற்பங்களும், செவிக்கினிய கற்றோர் இன்னிசைத் தமிழ் பாக்களும், கருத்துக்கினிய கருத்துரைகளும், கொண்டு விளங்குவது தமிழகமாகும். இத்தமிழகத்தில் சோழ நன்னாடான தஞ்சை மாவட்டம் தென்னாட்டின் நெற்களஞ்சியமாகவும், திருக்கோவில்களின் உறைவிடமாகவும் உள்ளது. இத்தஞ்சை மாவட்டத்திலே எவ்வாற்றானும் சிறந்து விளங்குவது "திருவேரகம்" என்ற சுவாமிமலையே. கலியுகத்தில் கண் கண்ட தெய்வமாய், பக்தர்களால் பாரிக்கப்படும் முருகன்தலமாகும் சுவாமிமலை. இத்தலம் ஆறுபடை வீடுகளில் நான்காவதாகும். நாள்தோறும் திருவிழா எனும்படியாக அடியவர்களின் கூட்டங்களாலும், அவ்வப்பொழுது எண்ணற்று நடக்கும் திருமணங்களாலும், இந்த ஊர் யாத்ரீகர்கள் காணும் ஓர் முக்கிய தலமாகிவிட்டது. இத்தலத்திற்கு வரும் அடியார்கள் இறைவனைத் தரிசித்துத் தலப்பெருமையை விளக்கும் தல வரலாற்று நூலை விரும்பி வாங்கிப்படித்து மகிழ்கிறார்கள். முன்பு வெளியிட்ட தேவஸ்தானத்துத் தலபுராணம் ஐந்து பதிப்புகள் செலவழிந்துவிட்டன. இதற்கிடையில் பக்தர்களும், பெரியோர்களும் நாள்தோறும் இத்தலநூலை விரும்பிக் கேட்டுக்கொண்டே இருந்தபடியால் இப்புதிய பதிப்பு வெளியிட ஏதுவாயிற்று. இப்புதிய பதிப்பில் பலபுதிய சேர்க்கைகளும் பகுதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. புதிய முறைப்படி ஆக்கப்பட்டுள்ளது. முதலில் இந்நூலை

Printed at
Sri Janardhana Printing Works Ltd.,
Kumbakonam